# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 04.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண்.SA2717/F/2020**

**திரு A.சேகர் பாய் … மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**திருப்பத்தூர் வட்டம் & மாவட்டம். … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | --- |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **29.08.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **02.03.2020** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு A.சேகர் பாய் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் வட்டம் & மாவட்டம். ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தங்கள் அலுவலகத்திற்கு 01.08.2016-ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ்

கோரி அனுப்பப்பட்ட மனுவின் பதில் விபரம், தனது கணவர் அர்ஜுன் சிங் மற்றும் அவரது தந்தை மதன்சிங் ஆகியோருடைய சொத்து விபரத்தை தகவலாக வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 6(3)-ன் கீழ் 06.09.2019 தேதியிட்டு உரிய பொதுத் தகவல் அலுவலரான பொதுத் தகவல் அலுவலர்/ வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 07.11.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரின் தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 29.08.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 02.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் திருப்தியற்ற தகவலை வழங்கியிருப்பதால் சரியான தகவலை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களை வழங்கும் பட்சத்தில் வாரிசு சான்றிதழ் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய வாரிசு சான்றிதழ் தொடர்புடைய தகவலுக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறு மேல்முறையீட்டாளருக்கு ஆணையம் அறிவுறுத்துகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் சமர்பிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில்**

பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. **தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். SA2717/F/2020</u>**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**திருப்பத்தூர் வட்டம் & மாவட்டம்.**

<u>மனுதாரர்</u>

**திரு A.சேகர் பாய்,**
**எண்.28, IVth கிராஸ், 3rd மெயின்,**
**தட்சிணாமூர்த்தி நகர்,**
**புதுச்சேரி - 9.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-17.11.2020